**மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தென்காசி.**

SC No. 37/2024

dated : 12.09.2024

P.W. 6 - கலைச்செல்வி

எதிரி ஆஜர்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இன்று அ.சா.1 பரமசிவமும் நீதிமன்றம் வந்திருந்தார் என்றால் சரிதான். நான் தற்போது இராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தையல் வேலை செய்து வருகிறேன். நான் வீட்டிலேயே கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னுடன் சேர்த்து 5 நபர்கள் தையல் செய்து வருகிறார்கள். அவர்கள் பெயர்கள் மகேஷ்வரி, பேச்சியம்மாள், காளி, அனிதா. என்னுடன் சேர்த்து 5 பேர். எங்கள் ஊருக்கு வந்த நகைக்கடைக்காரர் எந்த ஊரைச் சேர்ந்தவர், அவரது பெயர், முகவரி எதுவும் தெரியாது. நான் அவரை விசாரித்துக்கொள்ளவும் இல்லை. அவர் எந்த நாளில், எந்த கிழமையில் தென்மலை கிராமத்திற்கு வருவார், எந்த நேரம் அங்கிருந்து புறப்பட்டு செல்வார் என்று குறிப்பிட்டுத் தெரியாது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் நாளில் நகை கடைக்காரர் எந்த வாகனத்தில் வந்தார் என்று எனக்கு தெரியாது. நகை கடைக்காரர்கள் எங்கள் கிராமத்திற்கு எத்தனை பேர் வந்து செல்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. பொதுவாக குருசாமி கடைக்கு தான் அனைத்து வியாபாரிகளும் வருவார்கள் என்றால் எங்கு வைத்து கேட்கிறார்களோ அங்கு வைத்து கொடுப்பார்கள் பொதுவாக குருசாமி கடை அருகில் இருப்பார்கள். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அவர் குருசாமி கடையில் தான் நின்று கொண்டிருந்தார். அவர் யாரிடம் இருந்து பணம் வாங்குகிறாரோ அவர்களிடம் அட்டையில் பதிவு செய்து கொடுப்பார். அவர் ஒரு நோட்டில் எழுதி கொடுப்பார் ரசீது கொடுப்பார் என்றால் சரியல்ல. நான் அவரிடம் அன்றைய தினமோ அதற்கு முன்போ நகை ஏதும் வாங்கியதில்லை வேறு யாரும் வாங்கினார்களா என்று எனக்குத் தெரியாது. குருசாமி கடையில் இருந்து சங்கரபாண்டி மாமனார் வீடு தெரியாது என்றால் சரியல்ல எதிர் வீடு. சங்கரபாண்டியன் வீடு தென்னங்கீற்றால் மறைக்கப்பட்ட வீடா என்றால்

ஞாபகம் இல்லை. அவரது எதனால் கட்டப்பட்டது என்றால் ஓட்டுக்கூரையால் ஆனது. எதிரியின் கணவர் பழனிச்சாமி வீடு ரோட்டிற்கு கீழ்புறம் உள்ளது என்றால் சரிதான். பழனிச்சாமியின் வீட்டிற்கு அடுத்த தெருவில் மீனாட்சி வீடு உள்ளது என்றால் சரிதான் அது பழனிச்சாமியின் வீட்டிற்கு நேர் பின்னால் உள்ளது. நான் அன்றைய தினம் அங்கு இருந்தேனா, எதிரி அங்கு இருந்தாரா என்ற விவரங்கள் நகைக்கடைக்காரரை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். எதிரியின் மாமனார் சங்கரபாண்டி குடும்பத்தினருக்கும் எங்கள் மாமனார் குடும்பத்திற்கு இடையே பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தினருக்கும் எதிரி குடும்பத்தினருக்கும் இடையே வீடு சம்மந்தமாக இடப்பிரச்சனை இருந்து வந்தது என்றும் அதை வேண்டுமென்றே மறைக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு 1 மாதத்திற்கு முன்பு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு குழந்தை பிறந்தது என்றால் அது பற்றி தெரியாது. அவருக்கு குழந்தை பிறக்கும் வரை தென்மலை கிராமத்தில் தான் இருந்தார் என்றால் சரிதான். குழந்தை பிறந்த பின்னர் சொந்த ஊருக்கு சென்றுவிட்டார் . அவர் எப்போது திரும்பி வந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 09.09.2019 ம் தேதி மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை அந்த தெருவில் என்ன நடந்தது என்று எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. நான் வீட்டை விட்டு வெளியே வந்து பார்க்கும் போது பரமசிவன் வீட்டின் முன்பு கூட்டமாக இருந்தது என்றால் நான் அதற்கு முன்பே வந்து விட்டேன். நான் கூறுவது போல் 09.09.2019 ம் தேதி மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை தெருவில் நடந்த விவரம் எதுவும் தெரியாது என்றும் அ.சா.1 ன் தூண்டுதலின் பேரில் நான் இன்று நீதிமன்றம் ஆஜராகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 09.09.2019 அன்று நான் சாட்சி அனிதாவையோ, எதிரியையோ பார்க்கவில்லை என்றால் சரியல்ல. 09.09.2019 முதல் 11.09.2019 வரை குழந்தை எப்படி இறந்தது என்று எங்கள் குடும்பத்தில் பேசிக்கொண்டார்களா என்றால் அப்படி எதுவும் பேசிக்கொள்ளவில்லை. போலீஸார் 09.09.2019 ம் தேதி அன்றே விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லையா

என்றால் ஞாபகம் இல்லை. நான் போலீசார் விசாரணையின் போது முனீஸ்வரியும் இறந்த குழந்தை கவினாவும் முனீஸ்வரி வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்கள் என்றும் அதை நான் பார்த்தேன் என்றும் கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன். நான் அவ்வாறு எதுவும் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மதியம் 1.30 மணிக்கு ஒரே சத்தமாக கேட்டது நான் என்னவென்று போய் பார்த்தேன் என்று நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரத்தை ஆய்வாளரிடம் கூறியிருக்கிறேன். நான் அவ்வாறு எதுவும் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. குழந்தையின் உதட்டில் காயம் இருந்தது குழந்தையை பரமசிவம் வீட்டு வாசலில் வைத்தார் என்று நான் ஆய்வாளர் விசாரணையில் நான் கூறியிருந்தேன். நான் அவ்வாறு ஏதும் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் நான் கவரிங் செயின் விற்கும் நபரிடம் எதிரியின் வீட்டு வாசலில் வைத்து நானும், சக்திமாரி என்பவரும் நகைகளை பார்த்துக் கொண்டிருந்தோம் என்றும் அது பிடிக்கவில்லை என்று வேண்டாம் என்று கூறிவிட்டு வீட்டிற்கு திரும்பினேன் என்றும் அப்போது எதிரியையும், குழந்தையையும் எதிரி வீட்டில் பார்த்தேன் என்றும் கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. அப்போது பழனிச்சாமி கவினாவை தூக்கிகொண்டு வந்தார் என்றும் குழந்தையின் உதட்டில் காயம் இருந்தது என்றும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று நான் கூறுவது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. இடப்பிரச்சனை சம்மந்தமாக எதிரி குடும்பத்தினர் மீது உள்ள விரோதத்தின் காரணமாகவும் எதிரியை இந்த வழக்கில் சேர்க்கவேண்டும் என்பதற்காகவும் பொய்யான வாக்குமூலத்தை ஆய்வாளர் தயாரித்துள்ளார் என்றும் தற்போது நான் அந்த வாக்குமூலத்திற்கு ஏற்ப சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 09.09.2019 அன்று நான் தென்மலை ஊரிலேயே இல்லை என்றும் அன்றைய தினம் அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. குழந்தை கவினாவிற்கு அ.சா.1 பரமசிவன் வீட்டில் வைத்து தான் இறப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1,2 ஆகிய இருவரும் குழந்தையை அதன்

நடவடிக்கைகளை கவனித்து பாதுகாப்பாக வைத்திருந்தால் குழந்தைக்கு இறப்பு ஏற்பட்டிருக்காது என்றும் அ.சா.1,2 ன் கவனக்குறைவு தான் குழந்தையின் இறப்பிற்கு காரணம் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளுக்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No. 37 /2024**

| | | | |
|---|---|---|---|
| அ.சா. | : 15 | நாள் | : 12.09.2024 |
| பெயர் | : அன்பு செல்வி | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 12th day of September 2024.

**எதிரி ஆஜர்.**

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகிரி தாலுகா தேவிப்பட்டிணத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தென்மலை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக கடந்த 12.09.2019ம் தேதி கிராம நிர்வாக அலுவலகத்தில் நான் இருந்த போது ஆஜர் எதிரியும், அவரது கணவரும் எனது அலுவலகத்திற்கு மதியம் சுமார் 12.00 மணிக்கு வந்திருந்தார்கள். பரமசிவன் என்பவரின் குழந்தையை முனீஸ்வரி தலவாணி வைத்து கொன்றுவிட்டதாகவும் கூறினார். என்னை விட என் கணவர் குழந்தை கவினா மீது அதிக பாசம் வைத்திருந்ததாக கூறினார். நான் அவர் கூறியதை பதிவு செய்து கொண்டு சிவகிரி காவல் துறையினரிடம் கொண்டு

ஒப்படைத்தேன். பழனிச்சாமியின் சித்தப்பா பரமசிவம், அவரது மகள் கவினா ஆவார். ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படுவது நான் பதிவு செய்த வாக்குமூலம் இதுதான் . அது அ.சா.ஆ.6 ஆகும். நான் காவல் நிலையத்தில் வைத்து ஒரு கையெழுத்து போட்டேன். அ.சா.ஆ 6 தவிர வேறு எதுவும் கொடுக்கவில்லை.

**குறுக்கு விசாரணை :**

நான் சுமார் 10 ஆண்டுகளாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் புளியங்குடி. நான் இதற்கு முன்பு நீதிமன்ற நடவடிக்கைகளில் சாட்சியம் அளித்துள்ளேன். ஒரு கிராம நிர்வாக அலுவலர் அந்த கிராமத்திலேயே தங்கியிருந்து பணிபுரிய வேண்டும் என்றால் சரிதான். புளியங்குடியில் இருந்து தென்மலை சுமார் 30 கி.மீ மேலாக இருக்கும் என்றால் சரிதான். நான் தினமும் புளியங்குடியில் இருந்து தென்மலைக்கு பேருந்தில் பயணித்து பணிக்கு சென்று, திரும்புவேன் என்றால் சரியல்ல. அங்கேயே தங்கியிருப்பேன். எனக்கு தெரிந்தவர் ஜெயா என்பவரின் வீட்டில் தங்கியிருந்தேன். 12.09.2019 க்கு முன்பாக எதிரி மற்றும் எதிரியின் குடும்ப விபரங்கள் தெரியாது. அவரை நான் சந்தித்தோ, பேசியதோ இல்லை. எந்தவொரு பழக்கம் கிடையாது. தினசரி பணிகளை நாங்கள் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வாரம்தோறும் நாங்கள் மேலதிகாரிக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்றால் சரியல்ல. அதுபோன்ற வாரம் அறிக்கை அனுப்ப வேண்டும் என்றும்,

வேண்டுமென்றே அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் அலுவலகத்தில் Movement Register பராமரிக்கப்படவில்லை. வெளியே உள்ள அறிவிப்பு பலகையில் குறிப்பிடுவோம். Movement Register பதிவு செய்ய வேண்டும் என்றும், அதை மறைப்பதற்காகவே பராமரிக்கப்படவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசாதரண மரணம் ஏற்பட்டது என்பதை பற்றி விபரங்கள் தெரியவந்ததும். எங்கள் உயர் அதிகாரிக்கும், காவல் அதிகாரிக்கும் தகவல் தெரிவிப்போம் என்றால் சரிதான். 12.09.2019 அன்று நாங்கள் 09.09.2019 முதல் 11.09.2019 வரை எங்கள் கிராம எல்கைக்ககுட்பட்ட பகுதிகளில் அசாதரண மரணம், சந்தேக மரணம் என்று எதையும் மேலதிகாரிக்கு தகவல் தெரிவிக்க இல்லை. ஆனால் இயற்கை மரணம் என்று தெரிவித்து உள்ளோம். நான் அவ்வாறு தெரிவித்தாக கூறுவது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலகம் சிவகிரி - சங்கரன்கோவில் சாலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் பேருந்துநிலையம், குடியிருப்புகள், பஞ்சாயத்து அலுவலகம் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த பகுதி ஆட்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். பகல் நேரங்களில் இருக்கும். எங்கள் அலுவலகத்தினை சுற்றி தனிநபர் கடைகள், வீடுகள் உள்ளது. அங்கு இருந்து சிவகிரி காவல்நிலையம் சுமார் 20 நிமிடம் பயணத்தில் அடைந்து விடமுடியும் என்றால் சரிதான். தென்மலை கிராமத்திற்கு மேற்கே கோவிலூர் காலனி உள்ளது. அதில் சுமார் 500 வீடுகள் உள்ளன. சட்டம் சார்ந்த வழக்கிற்கு

ஒரு நபர் வாக்குமூலம் கொடுப்பதற்கு என்னை தேடி வந்தால், நாங்கள் வருவாய் ஆய்வாளர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால் தெரிவிப்போம். அவ்வாறு வாக்குமூலம் பதிவுசெய்வதை மூன்று தனி நபர்கள் முன்னிலையில் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. அவ்வாறு பதிவு செய்ய வேண்டும் என்றும், அது எங்களது வழிகாட்டி கையேட்டில் குறிப்பிடப்படுகிறது என்றால் சரியல்ல. அவ்வாறு வாக்குமூலம் பதிவு செய்தவுடன் தனியறிக்கை ஒன்றை அதன் நகலுடன், எங்கள் உயர் அதிகாரிக்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். தனியறிக்கையை வாக்குமூலம் நகலுடன் மேலதிகாரிக்கு நான் அனுப்பி வைக்கவில்லை. நான் வருவாய் ஆய்வாளருக்கு அந்த அறிக்கையை அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். வாக்குமூலம் 3 நகல்களாக தயாரிக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ 6 ல் நகல் வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ-6 , ஐந்து பக்கங்கள் கொண்டது என்றால் சரிதான். 4 வது தாளில் மட்டும்தான் எதிரியின் கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். மற்ற பக்கங்களில் எதிரியின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். அந்த கையொப்பம் இடையில் செருக்கப்பட்டது போல் காணப்பட்டது என்றால் சரிதான். மேலும், கீழும் எழுதப்பட்டதற்கு இடையில் எதிரியின் கையொப்பம் காணப்படுகிறது என்றால் சரிதான். எங்கள் அலுவலக உதவியாளர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எதிரியுடன் வந்ததாக கூறப்படும் அவரது கணவரின் கையொப்பம் இல்லை

என்றால் சரிதான். தனிநபர்கள் யாரையும் சாட்சியாக இருந்து கையொப்பம் இடும்படி அழைக்கவில்லை. 4ம் பக்கத்தில் நேரம் அடித்து திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் அலுவலக முத்திரை மற்றும் விபரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.6 ல் காணப்படும் எழுத்துக்கள் மற்றும் அ.சா.ஆ 6ல் காணப்படும் எழுத்துக்கள் ஒரே மாதிரி உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.6 தென்மலை கிராமம் பாகம் 1 என்று கிராம நிர்வாக அலுவலர் என்று என் கையெழுத்து கீழ் எழுதப்பட்டுள்ளது. அ.சா.ஆ 6ல் கையொப்பத்திற்கு மேலே உள்ள எழுத்துக்கள் எனது பதவிக்கு பதிவு செய்யப்பட்ட எழுத்துக்களும் வெவ்வேறானது என்றால் சரிதான். நான் காளிராஜ் என்பவருக்கு எழுதிக் கொடுத்த ஒளிநகல் என்னிடம் காட்டப்படுகிறது. என்றால் சரிதான். அந்த ஒளிநகல் எ.த.சா.ஆ.1. ( அரசு தரப்பில் ஒளிநகல் என்பதால் குறியீடு ஆட்சேபிக்கப்படுகிறது. தீர்வின் போது ஒளிநகலின் ஏற்புதன்மைக்கு குறித்தும், சாட்சியம் தன்மை குறித்தும் ஆராயளம் என்ற தீர்வுடன் குறியீடு அனுமதிக்கப்படுகிறது.) நான் அ.சா.ஆ 6ல் எழுதிய எழுத்துக்களுக்கும், நான் வழங்கிய சான்றில் உள்ள எழுத்துக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ-6ல் என் பதவியின் பெயர் என் கையொப்பத்தின் கீழ் உள்ள எழுத்துக்கள் என்னால் எழுதப்பட்டதுதான். அ.சா.ஆ 5 ன் உள்ள எழுத்துக்களையும், அ.சா.ஆ 6ல் உள்ள எழுத்துக்களையும், ஆய்வுக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். அன்றைய தினம் அலுவலகத்தில் மாரீஸ்வரி என்ற உதவியாளர் இல்லை.

நானும், மாரீஸ்வரியும் அப்போது பணியில் இருந்ததாக, ஆய்வாளர் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருந்தால் அது தவறு ஆகும். எதிரி வந்த நேரம் 12.00 மணி நேரம் என்று ஆய்வாளரிடம் குறிப்பிட்டு கூறவில்லை. எதிரி எப்போது வந்திருந்தார் என்றும், அவரை எப்போது காவல்நிலையம் சென்று ஒப்படைத்தேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில் எதிரியும், அவரது கணவர் , எனது அலுவலகத்தில் வந்ததாக கூறுவதும், வாக்குமூலம் பதிவு செய்ததாக கூறுவதும், அதை காவல்நிலையத்தில் ஒப்படைத்தாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. ஏற்கனவே காவல்நிலையத்தில் வைத்து காவல் ஆய்வாளர் தயாரித்த ஆவணங்கள் அரசு அதிகாரி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் செய்து கொடுத்து விட்டு அதற்கு ஏற்ப சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முன்பின் அறிமுகம் இல்லாத எதிரி என்னிடம் வாக்குமூலம் கொடுத்ததாக கூறுவதும் பொய் என்றும், அவர் எங்களது அலுவலகத்தில் வைத்து வாக்குமூலம் கொடுக்கவில்லை என்பதால்தான் எங்கள் அலுவலக முத்திரை அதில் இல்லை என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை